1980 ஜூலை 28] [டாக்டர் எச். வி. ஹண்டே]

அரசாங்க மருத்துவ மனைக்கு நோயாளிகள் எல்லாம் வரக்கூடிய நிலைமையை படிப்படியாக ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளில் தண்ணீர் இன்றி பயிர்கள் வாடுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, செ. சிவசாமி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார்கள். திரு. மு. அம்பிகாபதி அவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி, பட்டுக்கோட்டை தாலுக்காக் களில் கல்லணைக் கால்வாய், வடவாறு விரிவாக்கக் கால்வாய் ஆகியவற்றிற்குத் தண்ணீர் விடாததால் எழுந்துள்ள நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர் களே, வழக்கமாக மேட்டூர் அணையைத் திறந்து விடும் நாளான ஜூன் மாதம் 12-ந் தேதி, இந்த ஆண்டும் மேட்டூர நீர்த்தேக்கம் பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டது. 16—6—1980 ஆம் தேதி அன்று தண்ணீர் கல்லணையை அடைந்து, காவிரி, வெண்ணாறு கல்லணைக் கால்வாய்களில் நீர்விடப்பட்டது. நீர்த்தேக்கத்திலிருந்து வெளியே செல்லும் நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 5—7—1980 முதல், வெள்ளக் காலங்களில் விடப்படும் அளவிற்கு நீர்விடப் பட்டது. தஞ்சாவூர், மன்னார்குடி மற்றும் பட்டுக்கோட்டை வட்டங்களில், காவிரி–மேட்டூர் திட்டத்தின் ஆயக்கட்டிலுள்ள 2,56,000 ஏக்கர் நிலங்களுக்கு கல்லணைக் கால்வாயும் வடவாறு விரிவாக்கக் கால்வாயும் பாசனமளிக்கின்றன.

பொதுவாக பாசனத்திற்காக தண்ணீர் முழு அளவில் ஆரம் பத்தில் விடுவதில்லை. விவசாயிகள் பயன்படுத்துவதற்கு தேவையான நீர் அதிகமாகும்போது, அதற்கேற்ப நீர்விடுவது அதிகரிக்கப்படுகிறது. வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றில் விடப்பட்ட நீரின் அளவு 24—6—1980 முதல் அதி கரிக்கப்பட்டு, தேவைக்கேற்ப முழு அளவு நீர்விடப்பட்டது. கடைக்கோடிப் பகுதிகளையும் நீர் சென்றடைந்துள்ளது. ஆயக் கட்டின் எந்தப் பகுதியிலும் பாசனத்திற்கு நீர்விடுதலில் குறைவு ஏற்படவில்லை. பாசனத்திற்கு தண்ணீர் விடுவது பொதுப் பணித்துறையின் உயர் அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, நான் நேற்றுக்கூட மன்னார்குடி சென்றுவிட்டுத்தான் வந்திருக்கிறேன். மன்னார்குடி பகுதியில் காரிக்கோட்டை, மேல்வாசல், சுந்தரக்கோட்டை, நெடுலாக்கோட்டை, பரவாக்கோட்டை, உள்ளிக்கோட்டை, வடுவூர், புதுக்கோட்டை, பைங்காநாடு, திருமக்கோட்டை, பகலையக்கோட்டை, எளவனூர், தென்பரை, ராதாநரசிம்மபுரம் ஆகிய இத்தனை ஊர்களுக்கும் தண்ணீர் பாயவில்லை. அதேபோன்று பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரவர்களுடைய தொகுதியிலுள்ள உலையகுண்டம், கன்னியகுறிச்சி, சளிச்சாங்கோட்டை, வாராஜிக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை. இவையெல்லாம் கடைமடைப் பகுதிகளாக இருப்பதால் இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் பாய்வது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. எனவே இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலைமைகளை மாற்றுவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக கல்லணைப் பகுதிகளில் ஆற்றை அகலப்படுத்துவதற்கும் கல்லணைக் கால்வாய், வடவாறுக் கால்வாய் ஆகியவற்றில் தண்ணீர் அதிகமாகச் செல்வதற்கும் தகுந்த நடவடிக்கையைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி தாலுக்காவிலும், பட்டுக்கோட்டைத் தாலுக்காவிலும் பெரும்பான்மையான பகுதிகளுக்கு தண்ணீர் பாயவில்லை என்று சொல்லப்பட்டது. மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் 26-6-1980 அன்று தண்ணீர் விடப்பட்டது என்று சொன்னார்கள். கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் பாயவில்லை, அங்கு இன்னும் சென்று சேரவில்லை என்பதை எடுத்துக்காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோட்டைகளை எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தாலே அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களிடத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதைப்போக்கும் வகையில் கல்லணைக் கால்வாய், மன்னார்குடி பிரதானக் கால்வாய் ஆகியவற்றை ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசால் எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்தத் திட்டம் முடியுமா முடியாதா என்பது கேள்வி அல்ல. இது முடியக்கூடிய ஒன்றுதான். ஆகவே அதைப்பற்றித்தான் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.